[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.]

## பாகம் – ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

நாளும் **முழங்குகின்றாய்** - அந்த
நாளில் இருந்ததெல்லாம்!
காலப் பயனறியாய்! - உய்வைக்
காணும் கடன் மறந்தாய்!
பாழும் பிரிவினைகள் - வளர்த்தே
பாதை தவறிவிட்டாய்!
மீளும் வகைமொழிவார் தம்மொடும்
மோதிக் கெடுத்திடுவாய்!

**-கவிஞர் கரு.திருவரசு**

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது?

(2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் அணிச் **சிறப்புகள்** இரண்டனை எழுதுக.

(4 புள்ளி)

3. (i) **'முழங்குகின்றாய்'** என்பதன் பொருள் யாது? (2 புள்ளி)

(ii) நமது முன்னேற்றத்திற்கு நாமே எவ்வாறு தடையாய் இருக்கிறோம் எனக் கவிஞர் வருந்துகிறார்?

(2 புள்ளி)

[10 புள்ளி]



CamScanner

## பிரிவு இரண்டு : நாடகம்

4. பிசிராந்தையார் நாடக ஆசிரியரின் **புனைபெயர்களுள்** ஒன்றனைக் குறிப்பிடுக?

(2 புள்ளி)

5. (i) பிசிராந்தையார் நாடகத்தில் பச்சைக்கிளியோடு **உறவுமுறைத்** தொடர்புடைய இருவரைக் குறிப்பிடுக.

(2 புள்ளி)

(ii) பிசிராந்தையார் நாடகத்தின் **உத்திமுறைகளுள்** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

பிசிராந்தையார்: கழிவிரக்கம் வேண்டாம். இதைக் கேள். இந்தப் பாவையை, இந்தப் பச்சைக்கிளியை - நீ எந்த நிலையில் எப்படிக் குத்தினாய்? அதுபோல் இப்போது நீ செய்து காட்ட வேண்டும்.

மான்வளவன். ஐயோ! ஐயோ! அவையத்தார்களே! அரசர் பெருமானே! நான் அவ்வாறு செய்யமாட்டேன். என் மனைவியைத் துன்புறுத்தச் சொல்லாதீர்கள்.

அரசன் : அவள் உரு அமைந்த மரக்கட்டையைத் துன்புறுத்தவும் ஒப்பாத நீ, உயிரோவியத்தையே படுகொலை செய்தாயே அப்பா!

மான்வளவன் : கொடியவன்! நான் தொலைய வேண்டும். என் போன்ற கொடியவர்களைப் பாண்டி நாடு சுமக்கப் பொறாது. நான் உயிரோடிருந்தால் என் மனத்தொல்லை ஆறாது!

அரசன்: அப்படியானால், அவளைக் கொலை செய்தது போல் செய்து காட்ட மாட்டாயா?

மான்வளவன்: நினைத்தாலே **நெஞ்சு வெடித்துவிடும்** போலிருக்கின்றதே!

அரசன் : அப்படியானால், புண்படுத்தப்பட்ட நிலையில் அவளை நீ பார்! இப்படித்தான் அவளை வெட்டிச் சிதைத்தேன் என்று ஒப்புக்கொள்.

(காட்சி 15, பக்கம் 75) (உமா பதிப்பகம் 2020)

(i) இச்சூழலில் வெளிப்படும் மான்வளவனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **சமுதாயப்பின்னணியை** எழுதுக. (2 புள்ளி)

(iii) '**நெஞ்சு வெடித்துவிடும்** ' என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]



CamScanner

## பிரிவு மூன்று : நாவல்

7. வாடா மலர் நாவல் ஆசிரியர் பெற்ற **விருதுகளுள்** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

8. (i) வாடா மலர் நாவலில் **துணைக்கதைப்பாத்திரங்களுள்** இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) வாடா மலர் நாவலின் **இடப்பின்னணிகளுள்** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

"உங்கள் அம்மா இறந்தபோது உங்களுக்கு என்ன வயது இருக்கும்?"

இரண்டு வயதுக்கும் குறைவாயிருக்கும். என் தாயின் முகம் எனக்கு நினைவே இல்லை. சின்னம்மாதான் என்னை அன்போடு வளர்த்தார்கள். நான் பெரியவன் ஆகிறவரையில் சின்னம்மாவே என் தாய் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்

" இதைக் கேட்டவுடன் எனக்கு வந்த தூக்க மயக்கமும் போயிற்று. ஏதோ ஒரு புதுக்கதை கேட்பதுபோல் இருந்தது. என் தந்தை மாற்றாந்தாயால் வளர்க்கப்பட்டவர் என்பது எனக்கே புதுமையாக இருந்தது. அது, நான் படைத்துச் சொல்லிவந்த கதைகளைவிடப் புதுமையாக இருந்தது.

"அப்படியானால், மாமியை நீங்கள் அம்மா என்றே அழைத்திருக்கலாமே? ஏன் சின்னம்மா என்று அழைத்தீர்கள்?" என்று என் தாய் கேட்டாள்.

"என்ன காரணமோ எனக்குத் தெரியாது. யாரோ சொல்லிக் கொடுத்திருப்பார்கள். அதுவே ஊன்றிவிட்டது. ஒரு வேடிக்கை என்னவென்றால், நான் சின்னம்மா என்று அழைத்ததைப் பார்த்து, அந்த அம்மாவின் வயிற்றில் பிறந்த என் தம்பிமார்களும் தங்கைமார்களும், "சின்னம்மா, சின்னம்மா" என்றே அழைத்தார்கள். ஆகவே, அவர்கள் எங்கள் எல்லோருக்கும் சின்னம்மாவாக இருந்து **வாழ்ந்துவிட்டுப் போனார்கள்**. கள்ளம் கரவற்ற மனம். அப்படிப்பட்டவர்களை இந்தக் காலத்தில் பார்க்க முடியாது.

(அத்தியாயம் 6, பக்கம் 46) மல்டி எடுகெஷ்னல் புக் எண்டபிரஸ் 2020)

(i) இச்சூழலில் வெளிப்படும் குழந்தைவேலு தந்தையின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **சமுதாயப் பின்னணி** ஒன்றனை எழுதுக. (2 புள்ளி)

(iii) '**வாழ்ந்துவிட்டுப் போனார்கள்** ' என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]



CamScanner

## பாகம் இரண்டு

கீழ்க்காணும் பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

### ஞானவழி

ஈனவழிச் சென்றே நாளும்
இயல்பிலாச் செயல்க ளாற்றிப்
போனவழி நெறியென் கின்றாய்;
பொய்க்கு, மெய் வண்ணம் பூசி
ஊனவிழிக் குயர்வு சேர்ப்பாய்;
உனக்கொன்று சொல்வேன், நல்லோர்
ஞானவழி நிற்பாய், நெஞ்சே
நல்லுப தேசம் இஃதே!

குணம்விட்டுக் குறிகள் கெட்டுக்
குவலயம் தன்னில் ஆன்றோர்
இனம்விட்டுச் சிறுமை செய்,தீ
இயல்பினர் தம்மை நாடிப்
பணங்கண்டு பல்லி ளிக்கும்
பாங்கினைப் பெற்றாய், அன்பால்
உனக்கொன்று சொல்வேன், நெஞ்சே
உயர்ஞான நெறிநிற் பாயே!

உற்றுற்றுப் பார்க்கின் றாயே,
உன்னைத்தான் மனமே கேளாய்!
எற்றுப்பட் டுழன்று வாழ்வில்
ஏதப்பட் டழிகின் றாய், நீ
பற்றற்று வாழ்வார் வாழ்வின்
பளுவற்றுத் திகழ்வார்; அந்த
வெற்றிக்கு வித்தாம் ஞான
விளக்கினைப் பற்று வாயே!

- **கவிஞர் பொன்முடி**

10. மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக.

[20 புள்ளி]

**அல்லது**



CamScanner

11. கீழ்க்காணும் கவிதையை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**சஞ்சிக் கூலி**

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச்சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் - உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் - உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

காலை எழுந்த கடன்முடி யாமல்
கையில் வாளிக் கனம்குறையாமல்
பாலை நிரப்பிக் கொடுத்ததை யன்றிப்
பலனை முழுதும் கண்டாயா? - உன்
பங்கை முழுதாய்க் கொண்டாயா?

தேடிய பணத்தில் ஓடிய செலவைத்
திடமாய்க் கொஞ்சம் சேமித்திருந்தால்
வாடிய நாளே வாய்த்திருக் காது
மற்றவர் போல் நின்றிருப்பாய்! - வெறும்
மழுங்க னாகவா இன்றிருப்பாய்?

**- கவிஞர் காரைக்கிழார்**

i) இக்கவிதையில் கவிஞர் கையாண்டிருக்கும் **ஓசை நயம்** மூன்றனை எழுதுக.
(10 புள்ளி)

(ii) இக்கவிதையின் மூலம் கிடைக்கப்பெறும் **படிப்பினை** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 புள்ளி)

[20 புள்ளி]



CamScanner

## பிரிவு இரண்டு : நாடகம்

12. பிசிராந்தையார் நாடகத்தின் **கதைச்சுருக்கத்தை** எழுதுக.

(20 புள்ளி )

**அல்லது**

13. பிசிராந்தையார் நாடகத்தில் **பிசிராந்தையாரின் பண்புநலன்களை** விளக்கி எழுதுக.

(20 புள்ளி )

## பிரிவு மூன்று : நாவல்

14. (i) வாடாமலர் நாவலில் **குழந்தைவேலுவின் பண்புநலன் மூன்றனை** விளக்கி எழுதுக. (10 புள்ளி )

(ii) வாடாமலர் நாவலில் இடம்பெற்றுள்ள **துணைக்கருப்பொருள் மூன்றனை** விளக்கி எழுதுக. (10 புள்ளி )

(20 புள்ளி )

**அல்லது**

15. (i) வாடாமலர் நாவலில் **மீனாட்சி அம்மாளின் பண்புநலன் மூன்றனை** விளக்கி எழுதுக. (10 புள்ளி )

(ii) வாடாமலர் நாவலில் இடம்பெற்றுள்ள **உத்திமுறை மூன்றனை** விளக்கி எழுதுக.

. (10 புள்ளி )

(20 புள்ளி )

**கேள்வித்தாள் முடிவுற்றது**

**KERTAS PEPERIKSAAN TAMAT**



Selamat mengulangkaji dari telegram@soalanpercubaanspm

CamScanner

படிவம் 5 (முன்னோட்டத் தேர்வு 2022)

| எண் | விடைப்பட்டி | புள்ளி |
|---|---|---|
| 1 | தமிழர் முன்னேற்றம் | 2 |
| 2 | திரிபு அணி = நாளும் – மீளும்<br>தன்மை நவிற்சி அணி = காலப் பயனறியாய் (எல்லா வரிகளும்...) | 2<br>2 |
| 3 | i. சொல்கின்றாய் / கூறுகின்றாய் / மொழிகின்றாய் / பேசுகின்றாய்...<br>ii. * காலத்தின் அருமையை உணரவில்லை<br>• வளர்ச்சிக்கான வழிகளையும் தேடவில்லை<br>• நமக்குள் பிளவுகளை ஏற்படுத்தி வேறு திசை போகின்றோம்<br>• நம்மைத் திருத்த முயலுவோரிடம் வம்புக்குச் செல்கின்றோம்<br>(ஏதேனும் 1) | 2<br>2 |
| 4 | * புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்<br>* கிண்டல்காரன்<br>* கண்டெழுதுவோன்<br>* கிறுக்கன்<br>(ஏதேனும் 1) | 2 |
| 5 | i. பட்டுக்குடை, முத்துநகை, மான்வளவன், பொன்னன்<br>(யாரேனும் இருவர்)<br>ii. பின்னோக்கு உத்தி, முன்னோக்கு உத்தி, நனவோடை உத்தி, பாடல்/கவிதை உத்தி, கதைகூறல் உத்தி, ஓலை உத்தி, உரையாடல் உத்தி<br>( ஏதேனும் 1) | 2<br>2 |
| 6 | i. மனைவியின் மீது அன்பு கொண்டவன், நேர்மையானவன்<br>ii. அரண்மனைச் சமுதாயம் / மக்கட் சமுதாயம் (ஏதேனும் 1)<br>iii. தன் மனைவியைக் கொலை செய்யச் சொல்லும் அரசனின் ஆணையை எண்ணி வேதனையுறுகிறான் வான்மளவன்.<br>iv.பச்சைக்கிளியைத் தான்தான் கொன்றதாக ஒப்புக்கொண்ட மான்வளவனின் கூற்றை உறுதி செய்ய பிசிராந்தையார் ஆய்வு மன்றத்தில் விசாரணைக்கு ஏற்பாடு செய்கிறார். | 2<br>2<br>2<br>3 |
| 7 | சாகித்திய அகாடமி/ சென்னை அரசாங்கத்தின் பரிசு/ தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரம் (ஏதேனும் 1) | 2 |
| 8 | i. தானப்பன், பூங்கொடி...<br>ii. குழந்தைவேலின் வீடு, தானப்பனின் வீடு, அம்மன் கோவில் மேடு... (ஏதேனும் 1) | 2<br>2 |
| 9 | i. பிறர் நலனில் அக்கறை கொண்டவர் /<br>தன் துன்பத்தை மறைக்க நினைப்பவர்<br>ii. நடுத்தர வர்க்கம்<br>iii. குழந்தைவேலின் பாட்டி இறந்துவிட்டார்<br>iv. தானப்பபனைத் தன் சித்திக் கொடுமைப்படுத்துகிறாள். இதனைக் கண்ட தானப்பனின் அப்பா கண்டுக் கொள்ளாததுப் போல இருக்கிறார். இச்செயலைக் கண்டு குழந்தைவேலுவின் அப்பா மிகவும் வருந்துகிறார். தானப்பனின் நிலையை எண்ணி அவர் மீனாட்சி அம்மாளிடம் உரையாடுகின்றார். | 2<br>2<br>2<br><br>3 |
| 10 | கவிதை – **ஞானவழி** | 2 |



CamScanner

| | | |
|---|---|---|
| | **முன்னுரை : -**<br>கவிஞர் - கவிஞர் பொன்முடி<br>பாடுபொருள் – அறிவு<br>மையக்கரு - உயர்ந்தோர் வழி நிற்றல்<br><br>தெரிநிலைக் கருத்துகள் : -<br>**கண்ணி 1**<br><br>இழிவான வழியைப் பின்பற்றி, நல்லொழுக்கமற்ற காரியங்களில் ஈடுபட்டு, அதைச் சரியான பாதை என்றுரைக்கிறாய். பொய்யை மெய்யாக்கி, உண்மையை உணராமல் தவறான கண்ணோட்டத்திற்கு வலு சேர்க்கின்றாய். மனமே, உனக்கு நான் சொல்லும் அறிவுரை யாதெனில் நல்லவர்கள் காட்டும் உயரிய வழியில் நடப்பாயாக.<br><br>**கண்ணி 2**<br><br>நல்ல குணங்களை இழந்து, இலக்கின்றி, உலகில் உள்ள ஆன்றோர்களின் வழியிலிருந்து விலகி, தகாத காரியங்களைச் செய்யும், தீயவர்களோடு இணங்கி, செல்வமுடையவர்களைக் கண்டு அவர்களோடு சிரித்துப் பழகி வருகிறாய். மனமே, அன்பு மிகுதியால் உனக்குக் கூறும் அறிவுரை யாதெனில், எதையும் அறிவால் உணர்ந்து செயல்படும் மிக உயரிய வழியில் நடப்பாயாக.<br><br>**கண்ணி 3**<br><br>எதையும் ஆழ்ந்து நோக்கும் தந்மை கொண்ட மனமே, உனக்கு ஒன்று சொல்கிறேன் கேள். வாழ்க்கையில் முட்டிமோதி அலைந்து துன்புற்று அழிகின்றாய். உலக ஆசையைத் துறந்தவர்கள் துன்பமின்றி வாழ்வர். அந்த நிலைக்கு வழிகாட்டும் அறிவு நெறியைப் பின்பற்றுவாயாக.<br><br>**முடிவுரை** : சொந்தக் கருத்து | 15<br><br>2<br><br>மொழி 1 |
| 11 | **(i) ஓசை நயம்:**<br><br>**எதுகை**<br>(சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றி வருவது)<br><br>• ச**ஞ்**சிக்- வ**ஞ்**சித்<br>• ச**ஞ்**சிக் - க**ஞ்**சிக்<br>• கா**லை**- பா**லை**<br>• தே**டி**ய – வா**டி**ய<br><br>**மோனை**<br>(சீர்களில், முதல் எழுத்து ஓசையால் ஒன்றிவருவது) | 3X3 = 9<br>மொழி -1 |



CamScanner

- **ச**ஞ்சிக் – **த**லைமுறைாகச்
- **வ**ஞ்சித் – **வா**ழ்ந்தாருக்கே– வாணா
- **ச**ஞ்சிக் – **ச**ம்பாதித்ததுவும்
- **க**ஞ்சிக்– **க**டைவாசலிலே – **க**ட்டுலைத்தான்
- **கா**லை - **கை**யில்
- **பா**லை – **ப**லனை – **ப**ங்கை
- **தே**டிய – **தி**டமாய்க்
- **வா**டிய – **ம**ற்றவர் – **ம**ழுங்க

**சந்தம்**
(சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள் – ஓசைப் பகுதிகள் ஒரே தாள அளவுக்குப் பொருந்த அமைவது)

- மாரடித்தாய் – போரடித்தாய்
- சஞ்சிக் – வஞ்சித்
- சஞ்சிக் – கஞ்சிக்
- நிற்கின்றாய் – விற்கின்றாய்
- காலை – பாலை
- கண்டாயா – கொண்டாயா
- தேடிய – ஓடிய– வாடிய
- நின்றிருப்பாய் – இன்றிருப்பாய்

**இயைபு**
(சீர்களின் இறுதி அசை ஒன்றிவருவது)

- மாரடித்தாய் – போரடித்தாய்
- நின்றாய் – விற்கின்றாய்
- கண்டாயா – கொண்டாயா
- நின்றிருப்பாய் – இன்றிருப்பாய்

**முரண் தொடை**
(சீர்கள் பொருளால் முரண்பட்டு வருவது)

- வஞ்சி – வாழ்த்தி

**(ii) படிப்பினை**
(கருத்து + தீர்வு)

3X3 = 9
மொழி -1

- கருத்து : இந்தியர்களிடையே சேமிப்புச் சிந்தனை இல்லாததால் வேறுடையில் உழல்கின்றனர்.
  தீர்வு : இந்தியர்கள் சேமிப்புப் பழக்கத்தைக் கட்டாயம் வளர்த்துக் கொள்ள வேண்டும்/ வரவுக்கேற்ற செலவு செய்தல் அவசியம்.

- கருத்து : இந்தியர்கள் தாம் சஞ்சிக்கூலி என்று தங்களை

| | | |
|---|---|---|
| | அடையாளப்படுத்தி அடிமைப்பட்டு வாழ்கின்றனர்.<br>தீர்வு : இந்தியர்கள் வாழ்க்கையில் முன்னேற, சிந்தனை மாற்றம் தேவை.<br><br>• கருத்து : இந்தியர்கள் தங்களுக்கு வஞ்சகம் செய்தவர்களையே/ஏமாற்றியவர்களையே நம்பிப் போற்றுகின்றனர்.<br>தீர்வு : இந்தியர்கள் தங்கள் அறியாமையைப் போக்கிக் கொள்ளுதல் அவசியம்.<br><br>• கருத்து : இந்தியர்கள் உழைக்கத் தெரிந்தும் பிழைக்கத் தெரியாதவர்களாய் உள்ளனர்/இந்தியர்களின் உழைப்பில் பிறர் இலாபம் பெறுகின்றனர்.<br>தீர்வு : இந்தியர்கள் தங்கள் உழைப்புக்கேற்ற பலனைப் பெறுவதில் முனைப்புக் காட்ட வேண்டும்.<br><br>**( பிற ஏற்புடைய தாக்கம்)** | |
| 12 | பிசிராந்தையார் நாடகத்தின் **கதைச்சுருக்கம்**.<br>முன்னுரை :<br>நாடகம் : பிசிராந்தையார்<br>ஆசிரியர் : புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்<br>கருப்பொருள் : அறமும் உயர்நட்பும்<br><br>**கருத்துகள்** :<br>**1. பிசிராந்தையார் – அரசவை ஆலோசகர்**<br>• பிசிராந்தையார் பாண்டிய, சோழ மன்னர்களால் பெரிதும் மதித்துப் போற்றப் பெற்றவர்.அவர் பாண்டிய அறிவுடை நம்பியின் அரசவையில் அறிவுரை கூறும் ஆலோசகர். பாண்டிய மன்னனின் நல்லாட்சிக்குப் பிசிராந்தையாரின் ஆலோசனையும் அறிவுரையுமே காரணம் எனலாம்.<br>**2. மக்களில் தீயவரும் ஏழைகளும் இருக்க வேண்டும்**<br>• பிசிராந்தையார் தம் பேரனை யானைமீது ஏற்றிவிட்டு மகிழ்கிறார். அப்போது அங்கு வந்த மேற்படியார் என்ற புலவர் தன் வீட்டு வறுமையைப் பிசிராந்தையாரிடம் வேதனையுடன் கூறுகிறார். பிசிராந்தையார் உடனே தன் மார்பில் அணிந்திருந்த பதக்கத் தொங்கலை அவர் கையில் கொடுக்கிறார். மேற்படியார் கூறயது யாவும் பொய் எனப் புரிந்து யாவரும் நகைக்கின்றனர்.<br><br>**3. மக்கள் நலம் காண நகர் வலம்.**<br>• பாண்டிய நாட்டில் புயல் காற்று இடியோடு மழையும் பெய்தது. ஆராய்ச்சி மணியை அசைக்கிறார் பிசிராந்தையார். காற்று அவரையே தூக்கி எறிகிறது. அரசி தடுத்தும் பாண்டிய மன்னன் அரண்மனையை விட்டு வெளியே வருகின்றான். | 2<br><br><br>5 X 3<br>15<br>மொழி 1<br><br><br>2 |



CS CamScanner

- அரசன், பிசிராந்தையார், மேற்படியார் மக்கள் நலம் காக்க நகர் வலம் வருகின்றனர். அப்போது மீனவன் ஒருவனின் வலையில் ஒரு பெட்டி சிக்குகிறது.

**4. பெட்டியினுள் கர்ப்பிணிப்பெண்ணின் பிணம்.**

- பெட்டிக்குள் பெரிய புண்களோடு ஒரு கர்ப்பிணி பெண்ணின் பிணம் இருக்கிறது.
- பாண்டிய மன்னன் ஆட்சியில் மக்கள் நல்லவராகவும் செல்வராகவும் வாழும் நாட்டில் இந்தச் சம்பவம் பேரதிர்ச்சியைக் கொடுத்தது.
- விசாரணைச் செய்ததில் எந்தத் தகவலும் இல்லாததால் பாண்டிய மன்னன் மனம் உடைந்து தன் உயிரை மாய்க்கத் துணிகிறான். இதனை அறிந்த பிசிராந்தையாரும் தான் மன்னன் மீது கொண்டுள்ள நட்பை வெளிப்படுத்தும் பொருட்டு தானும் மன்னனோடு உயிர் துறக்க முற்படுகிறார். இதைக் கேட்டுப் பாண்டிய நாட்டு அமைச்சனும் மூன்று நாட்களுள் காரணமானவரைக் கண்டு பிடிக்காவிடில் தானும் உயிர் துறக்கப் போவதாகக் கூறுகிறான்.
  அமைச்சரைத் தூக்கிலிடுமுன், தூயன் என்ற சோழ நாட்டு இளைஞனும் முன்வந்து தான்தான் அக்குற்றத்தைப் புரிந்ததாகக் கூறுகிறான்.

**5. கொலைக்கான விசாரணை**

- மான்வளவன் என்ற பாண்டிய நாட்டு இளைஞனும் தான்தான் அக்குற்றத்தைப் புரிந்ததாகக் கூறுகிறான்.
- சம்பவத்தில் கொலைசெய்யப்பட்டவள் பச்சைக்கிளி,அவள் மான்வளவனின் மனைவி. மான்வளவன் தன் மனைவியைக் கொலைசெய்யக் காரணமாயிருந்தவன் தூயன். தூயன் தான் காதலித்த பச்சைக்கிளியை மணக்க இயலாததால் வஞ்சம் செய்கிறான். மான்வளவன் தீர விசாரிக்காமல் பச்சைக்கிளியின் மீது சந்தேகப்பட்டு அவளை வாளால் வெட்டிக் கொல்கிறான்.

**6. தீர்ப்பு வழங்குதல்**

- இருவரும் தாங்கள் செய்த குற்றத்தை உணர்ந்ததால் பாண்டிய மன்னன் அவர்களை விடுதலை செய்கிறான். பிசிராந்தையாரும் மன்னனின் முடிவைப் புகழ்வதோடு மட்டுமல்லாமல் பச்சைக்கிளிக்குக் கணவரை எதிர்க்க வல்லமை இருந்திருக்க வேண்டும் என்று உணர்த்துகின்றார்.
- சோழநாட்டு இளவரசன் இளங்கோச் சோழன் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தன் தந்தை கோப்பெருஞ்சோழனிடமிருந்து அரசைக் கைப்பற்ற நினைக்கிறான். சோழ நாட்டுப் படைத்தலைவனான பரூஉத்தையாரின் மகள் மணியிடையை இளங்கோச்சோழன் விரும்புவதாகவும் அவளையே திருமணம் செய்யப்போவதாகவும் கூறுகிறான். திருமணத்திற்கு முன்பு, தான் மன்னன் ஆவதற்கு உதவுமாறு கேட்டு சம்மதமும் பெருகிறான்.



CS CamScanner

**7. கோப்பெருஞ்சோழன் மீது போர்**

- படைத்தலவன் பரூஉத்தலையாரின் உதவியுடன் இளவரசர்கள் இருவரும் சேர்ந்து கோப்பெருஞ்சோழனை எதிர்க்கின்றார்கள்.
- படைத்தலைவன் தனக்குத் துரோகம் செய்துவிட்டதாகக் கோப்பெருஞ்சோழன் கோபம் கொள்கிறான்.
- இதனிடையே பாண்டிய நாட்டின் எல்லையில் சோழ படை இருப்பதை ஒற்றன்வழி அறிகின்றான் பாண்டியன்.
- பிசிராந்தையாரைக் காண பிசிருக்குச் சென்ற பாண்டிய மன்னனுக்கு வியப்பு. அங்கு பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் மீது கொண்ட அன்பையும் நட்பையும் வெளிப்படுத்தும் பாடலைக் கேட்டுப் பாண்டிய மன்னன் மனம் மாறுகிறான். சோழ மன்னன் நிச்சயமாக வஞ்சகப் போருக்கு வரமாட்டான் என்று உறுதியாக நம்புகிறான்.
- கோப்பெருஞ்சோழனின் சிறுபடைக்கும் துரத்தி வந்த பாண்டிய படைக்கும் இடையில் இளங்கோச்சோழனின் படை சிக்கிக் கொள்கிறது.
- மாற்றுடை அணிந்த இளங்கோச்சோழனையும் பரூஉத்தலையாரையும் சிரைபடுத்தும்படியும் அவர்களின் படையை வளைத்து நொறுக்கும்படியும் கோப்பெருஞ்சோழன் கட்டளையிடுகிறான்.
- கோப்பெருஞ்சோழன் தான் அனுப்பிய படையும் அவர்களுடன் சேர்ந்து கொண்டதையும் அறிந்து பெருங்கோபங்கொண்டு அவர்களை அழிக்க முற்படுகிறான்.அவன் கோபத்தை அறவுரையால் தனிக்கின்றார் புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார்.

**8. வடக்கிருந்து உயிர் நீத்தல்**

- கோப்பெருஞ்சோழன் இனித் தான் உயிர் வாழ்வதில் பயனில்லை என வடக்கிருந்து உயிர் நீக்க முடிவெடுக்கிறான்.
- பிசிராந்தையார் தன் ஆருயிர் நண்பன் நிலையைக்கேள்விப்பட்டுப் பெருந்துயரத்துடன் அங்கே வந்து, முதன் முதலாகத் தன் நண்பனைக் காண்கிறார். உடனே அவரை ஆரத்தழுவி அவரும் வடக்கிருகின்றார்.
- ‘அறம் வாழாத நாட்டுக்குத் துன்பம் நிச்சயம்’ என்று கூறிப் புலவர் பொத்தியாரும் வடக்கிருந்து உயிர் துறக்கிறார்.
- தன் தந்தையிடம் மன்னிப்புக் கேட்க வந்த சோழ இளவரசர்கள், அவர்கள் மூவரும் இறந்துபோய்விட்டதைக் கண்டு துயருகின்றனர்.
- இவற்றையெல்லாம் சோழ ஊர்மக்கள், அமைச்சன்,பாண்டிய மன்னன் அவனது பரிவாரங்கள் பார்த்து அவர்களின் ஆழ்ந்த நட்பைப் போற்றுகின்றனர்.

முடிவுரை :



CamScanner

| | | |
|---|---|---|
| 13 | **பிசிராந்தையாரின் பண்புநலன்கள்**<br>முன்னுரை :<br>நாடகம் : பிசிராந்தையார்<br>ஆசிரியர் : புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்<br>கருப்பொருள் : அறமும் உயர்நட்பும்<br>**1. உண்மை நட்பைப் போற்றுபவர்**<br>• கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இருந்த நட்பு, முகம் காணாமல் வளர்ந்த நட்பு.<br>• கோப்பெருஞ்சோழனின் ஆட்சிச் சிறப்பையும் பண்புநலன்களையும் அறிவுத்திறனையும் அரசாட்சியின் மாண்பையும் கேள்வியுற்று அவன்மீது ஆழ்ந்த அன்பும் நட்பும் கொண்டிருக்கிறார்.<br>• கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்துறக்க முடிவெடுத்தபோது அவன் நம்பியபடியே பிசிராந்தையாரும் அவனுடன் சேர்ந்து வடக்கிருந்து உயிர்துறக்கின்றார்.<br>**2. மன்னன் மீதும் மக்கள் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டவர்.**<br>• பாண்டியன் நீதி வழுவாது ஆட்சி செய்ய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவன் அருகிலிருந்து ஓர் அமைச்சரைப் போலவும் நல்லாசானைப் போலவும் ஆலோசனை கூறுவது அவரது இயல்பான பண்பாகும்.<br>• பச்சைக்கிளி கொலை வழக்கில் மதிநுட்பம் வாய்ந்தவரான பிசிராந்தையாரே பல அணுகுமுறைகளைக் கையாண்டு குற்றவாளிகள் குற்றத்தை உணரும்படியும் மனம் திருந்தும்படியும் செய்கிறார்.<br>**3. மாறுபட்ட கருத்தைக் கொண்டவர்**<br>• நாட்டில் தீயவர்களும் வறியவர்களும் வேண்டாம் என்பது பொதுவான கருத்து. ஆனால், அதற்கு மாறான கருத்தை முன்வைக்கிறார். மக்கள் நல்லவராகவும் செல்வராகவும் இருந்தால் போதாதெனவும், தீமையை எதிர்க்கும் வல்லவராகவும் இருக்க வேண்டும் என்கிறார்.<br>**4. இரக்க குணம் படைத்தவர்**<br>• மேற்படியார் எனும் புலவர் பிசிராந்தையாரை நாடி வந்து தம் குடும்பத்தின் வறுமை நிலையைச் சொல்கிறார். அரிசி வாங்கக்கூட பணமில்லை எனக் கூறியதால் தம் மார்பில் இருந்த கல்லிழைத்த பதக்கத்தொங்கலைக் கழற்றி மேற்படியார் கையில் கொடுகிறார்.<br>• புலவர் கூறியது பொய் என்று தெரிய வந்தும் அவரைக் கடிந்துகொள்ளவில்லை.<br>**5. மக்கள் நலம் பேணுபவர்**<br>• பாண்டிய நாட்டுத் தலைநகர் மதுரையில் ஒருநாள் மழை கடுமையாகப் பெய்கிறது. காற்று வேகமாக வீசுகிறது. மக்களுக்கு இதனால் ஆபத்து என்றுணர்ந்த பிசிராந்தையார் யானைமேல் சென்று ஆராய்ச்சி மணியை அடிக்கிறார். | 2<br><br><br><br>5 X 3<br>15<br>மொழி 1<br><br><br>2 |

| | | |
|---|---|---|
| | • அப்பொழுது அவர் கடுங்காற்றால் தூக்கி ஏறியப்படுகிறார்.மக்கள் இருக்க, பிசிராந்தையார் யானை மீது நின்று ஆராய்ச்சி மணியை அசைக்கக் கிளம்பியது தான் மக்களின் மீது கொண்டுள்ள பேரன்பைக் காட்டுகிறது.<br>(பிற ஏற்புடைய கருத்துகள்)<br>முடிவுரை : | |
| 14 (i) | **குழந்தைவேலுவின் பண்புநலன்கள்**<br>**கருத்துகள் :**<br>1. **பெற்றோரைப் போற்றுபவன்**<br>• திருமண ஏற்பாடுகள் அனைத்தும் பெற்றோரே முடிவு செய்ய விட்டுவிடுகிறான்.<br>• பெற்றோருக்கு முதுமையும் நோயும் வந்தால் சிறமப்படுவர் என்பதால் தனிக்குடித்தனம் வேண்டாம் என்கிறான்.<br>• தந்தைக்குப் பிடிக்காது என்பதால் தேர்தலில் போட்டியிட மறுக்கிறான்.<br>*2.* **நட்பைப் போற்றுபவன்**<br>• தானப்பனுக்கு நேரும் துன்பங்களைக் கண்டு அழுகிறான்.<br>• தானப்பனைச் சென்னையில் தேடி அலைகிறான்.<br>• தானப்பன் வாழ்வில் அக்கறைகொண்டு அவ்வப்போது அறிவுரைகள் வழங்குகிறான்.<br>• தானப்பனோடு புரிந்துணர்வோடு பழகுகிறான்.<br>*3.* **ஆடம்பர வாழ்வை விரும்பாதவன்**<br>• இரயில்பயணத்திற்குத் தானப்பன் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கியதை வீண் செலவு என்கிறான்.<br>• புகழ், பணம் ஆகியவை வளமான வாழ்வைத் தருமெனத் தானப்பன் கூறியும் அவற்றை விடுத்து உண்மை வழியில் நடக்கிறான்.<br>*4.* **ஒழுக்கத்தைப் போற்றுபவன்**<br>• தானப்பன் நீட்டிய சிகரெட் பெட்டியை வேண்டாமென மறுக்கிறான்.கல்லூரி விடுதியில் கருணாகரன் நீட்டிய சிகரெட் பெட்டியை வேண்டாமென மறுக்கிறான்.<br>• தானப்பன் வீட்டில் இல்லாதபோது,அங்குப் போன குழந்தைவேலுவைக் கனகம் உள்ளே அழைத்துத் தன்னுடன் பேச வற்புறுத்துகிறாள். அவன் அச்செயலை விரும்பாமல் அங்கிருந்து வெளியேறுகிறான்.<br>*5.* **மற்றவருக்கு உதவும் மனமுடையவன்**<br>• மனைவி பூங்கொடியின் அண்ணனுக்குத் தன் அப்பாவிடம் பணம் பெற்று உதவுகிறான்,<br>• சென்னையில் வேலை இல்லாமல் இருந்த தானப்பனுக்குப் பணம் கொடுத்து உதவ முன்வருகிறான்.<br>*6.* **தமிழ்ப்பற்றுக் கொண்டவன்** | 3 X 3<br>9<br>மொழி 1 |

| | | |
|---|---|---|
| | • 'பாம்பே தில்குஷ் ஓட்டல்' என உணவகத்திற்குத் தானப்பன் பெயரிட்டபோது அதற்குத் தமிழில் பெயரிடுமாறு கூறுகிறான்.<br>7. **அரசியலில் நாட்டம் இல்லாதவன்**<br>• தேர்தலில் ஓட்டுப் போடலாம் , அதில் ஈடுபடக்கூடாது எனத் தானப்பனிடம் கூறுகிறான்.<br>• தேர்தலின் பிரச்சாரம் செய்ய தானப்பன் கேட்டபோது மறுத்துவிடுகிறான்.<br>• தேர்தலில் போட்டியிட வற்புறுத்தியும் மறுக்கிறான்.<br>(ஏதேனும் 3 கருத்துகள்) | |
| 14(ii) | **துணைக்கருப்பொருள்கள்**<br>**கருத்துகள் :**<br>1. **நல்ல நட்பைப் போற்றுதல்**<br>• சித்தியின் கொடுமையால் தானப்பன் தலைமறைவானதால் குழந்தைவேல் அந்தப் பிரிவால் துன்பப்படுகிறான்.<br>• கல்லூரியில் படிக்கச் சென்றபோது தானப்பன் சென்னையில் இருப்பதறிந்து உணவுக்கடைகளில் தேடி அலைகிறான்.<br>• தான் சென்னையில் இருப்பதை யாருக்கும் தெரிவிக்க வேண்டாமென்று தானப்பன் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப அந்த உறுதிமொழியைக் குழந்தைவேல் காபாற்றுகிறான்.<br>• தானப்பன் வாழ்வில் அக்கறைகொண்டு அவ்வப்போது அறிவுரைகள் வழங்குகிறான்.<br>2. **நலம்தரும் எளிய வாழ்வு**<br>• ஆடம்பரமில்லா எளிய வாழ்க்கையின் முக்கியத்துவத்தை டாக்டர் மு.வ, வலியுறுத்துகிறார். முருகையாவும் அவர் மனைவி சுடர்விழியும் எளிமை வாழ்வு வாழ்கிறார்கள்.<br>• தேவைகளைக் குறைத்துக் கொள்ளும் அளவுக்கு வாழ்க்கையில் துன்பமும் சிக்கலும் குறையும் என்கிறார் முருகைய்யா.<br>• பிறரைப் பார்த்து ஆடம்பர வாழ்வுக்குள் சிக்கிக்கொண்டு அல்லலுறும் மனிதர்களுக்கு இவை புதிய சிந்தனைகளைத் தருகின்றன.<br>3. **வாழ்வை நெறிப்படுத்தும் அறநூல்கள்**<br>• 'அறநெறி' எனும் தலைப்பில் திரு.வி.க. ஆற்றிய உரையைக் கேட்ட தானப்பன் மனமாற்றம் அடைகிறான்.<br>• குழந்தைவேல் தானப்பனைக் காணச்செல்லும் போது அவன் நூல்களோடு இருப்பதைக் காண்கிறான்.<br>• பதவி,பணம், சமுதாய மதிப்பு எனத் தேடியலைந்த தானப்பன் அதன் பின்னர் அமைதி வாழ்விற்குத் திருப்புகிறான். | 3 X 3<br>9<br>மொழி 1 |



CamScanner

| | | |
|---|---|---|
| | **4. இல்லற வாழ்வில் புரிந்துணர்வு**<br>• கணவன் மனைவி மகிழ்ச்சியாக வாழ இல்லற வாழ்வில் புரிந்துணர்வு முக்கியம்.<br>• முருகையா எளிமை வாழ்வை விரும்புவதோடு உணவுக்கட்டுப்பாடு மிகுந்தவராகவும் உள்ளார்.<br>• சுடர்விழி கணவரோடு முரண்படாமல் அவர் கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறாள்.<br><br>**5. கட்டுப்பாடான ஆண் பெண் உறவு.**<br>• தவறான பழக்கம் அமைதியான இல்வாழ்க்கையில் புயல் வீசிச் சீரழிக்கும் என்பதைத் தானப்பனின் மனைவி கனகத்தின் வழி புலப்படுகிறது.<br>• தானப்பனின் மனைவி கனகம் திருமணத்திற்கு முன் ஆண்களோடு நெருங்கிப் பழகுகிறாள். திருமணத்திற்குப் பின் அந்தப் பழக்கத்திலிருந்து மீளாமல் தன் உறவினன் வச்சிரநாதனுடன் பழகுகிறாள். இதனால் அவளை வெறுக்கும் தானப்பன் அவளுக்கு மணவிலக்கு அளிக்கிறான்.<br><br>**6. பிள்ளைகளின் கடமை**<br>• குழந்தைவேல் தன் பெற்றோரின் விருப்பத்திற்கு இணங்கி, அடங்கி நடக்கிறான்.<br>• தன் பட்டப் படிப்பை முடித்தப் பின்னரும்கூட தனது வாழ்க்கைத்துணை, தொழில் போன்றவற்றை நிர்ணயம் செய்வதில் தன் பெற்றோரின் ஆலோசனையைக் கேட்டு நடக்கிறான்.<br>• மனைவி, தன் பெற்றோரை மதிக்காமல் நடக்கும் காலத்திலும் மிக நல்ல மகனாக, அவர்களின் உள்ளம் கோணாதவாறு நடந்து கொள்கிறான்.<br><br>(ஏதேனும் 3 கருத்துகள்) | |
| 15 (i) | **மீனாட்சி அம்மாளின் பண்புநலன்**<br>***1. அன்பானவர்***<br>• விளையாட்டில் மும்முரமாய் இருக்கும் குழந்தைவேல் சாப்பிடாமல் இருப்பதைப் பொறுக்க மாட்டாதவராய், உரத்த குரலில் கூப்பிட்டுச் சோறு உண்ணச் செய்கிறார்.<br>• குழந்தைவேலின் தனிக்குடித்தனத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்கிறார்.<br>• சுடர்விழியின் மகப்பேற்றுக்கு உதவி செய்ய அவளது வீட்டில் தங்கியிருந்த நிலையில் தன் கணவருக்கு முறையாக உணவு கிடைக்கப்பெறுகிறதா எனக் குழந்தைவேலிடம் விசாரிக்கிறார். | 3 X 3<br>9<br>மொழி 1 |

| | | |
|---|---|---|
| | ***2. அண்டை அயலாரோடு நெருக்கமாகப் பழகுபவர்***<br>• தனக்காக நீலநிறச் சேலை ஒன்று எடுத்த போது தானப்பனின் சித்திக்கும் அதே நிறத்தில் இன்னொரு சேலையும் எடுத்துக் கொடுக்கிறார்.<br>• தன் வீட்டில் செய்யும் சிற்றுண்டிகளைத் தானப்பன் வீட்டிற்கும் கொடுக்கிறார்.<br>• தானப்பனின் சித்தி மகப்பேற்றுக்காகத் தாய் வீட்டுக்குச் சென்றுவிட்ட பிறகு, தானப்பன் குடும்பத்தினரைத் தங்கள் வீட்டிலேயே சாப்பிடுமாறு கூறுகிறார்.<br>• தாயாரம்மாவுக்குக் கடன் கொடுத்து உதவுகிறார்.<br>***3. பிறர் நலத்தில் அக்கறை கொண்டவர்.***<br>• சுடர்விழி தன் சித்தியின் கொடுமைக்கு ஆளானதை எண்ணி வருந்துகிறார்.<br>• தானப்பனைக் காணவில்லை என்ற செய்தி அறிந்து பதறிப்போகிறார்.<br>• அவனுக்கு ஒன்றும் ஆகியிருக்கக்கூடாது எனத் தெய்வத்தை வேண்டிக் கொள்கிறார்.<br>• தந்தையின் மரணத்திற்குப் பிறகு குழந்தைவேலின் வீட்டிற்குத் தன் கணவரோடு சுடர்விழி வந்தபொழுது இனி தங்கள் வீடுதான் அவளுக்குத் தாய்வீடு எனவும் அடிக்கடி வந்து போக வேண்டுமெனவும் கூறுகிறார்.<br>***4. பெருந்தன்மை மிக்கவர்.***<br>• பூங்கொடி வீட்டில் எந்த வேலையும் செய்யாவிடில் பார்ப்பவர்கள் ஏதாவது சொல்வார்களே எனக் குழந்தைவேல் கூறிய பொழுது அதைப் பொருட்படுத்த வேண்டாமென்றும் காலப்போக்கில் அவள் குடும்பப் பொறுப்புகளைக் கற்று கொள்வாள் எனவும் கூறுகிறார்.<br>• தனிக்குடித்தனம் செல்ல வேண்டும் என விரும்பிய பூங்கொடியைக் குழந்தைவேலின் தந்தை அவளது தாய்வீட்டிலிருந்து அழைத்து வந்த பொழுது மருமகளிடம் அன்பாய்ப் பேசி மனக்கசப்பை மாற்றுகிறார்.<br>***5. பொறுமை குணம் மிக்கவர்***<br>• தானப்பனின் வீட்டுச்சிறையைக் கண்டித்துத் தானப்பனின் தந்தையிடம் பேசப்போவதாக் குழந்தைவேலின் தந்தை கோபமாகக் கூறிய பொழுது பொறுமை காக்கும்படி கூறுகிறார்.<br>(ஏதேனும் 3 கருத்துகள்) | |
| 15(ii) | **உத்திமுறைகள்**<br>**1. கதைகூறல் உத்தி**<br>• குழந்தைவேல் தானப்பனை இரயில் நிலையத்தில் சந்திக்கிறன். தானப்பன் சென்னையில் தன்னுடைய வாழ்க்கை அனுவபவங்களையும் முதலாளிகளால் தான் | |



CS CamScanner

| | | |
|---|---|---|
| | ஏமாற்றப்பட்டதையும் குழந்தைவேலிடம் கூறுகிறான். ஆனால், தான் சிறை சென்று வந்ததை மறைத்து, முதலாளியால் ஏமாற்றப்பட்டு, இப்பொழுது வேலை தேடிக் கொண்டிருப்பதாகக் கூறுகிறான்.<br>• முருகையா தன் வாழ்க்கை அனுபவங்களைக் குழந்தைவேலிடம் பகிர்ந்துகொள்கிறார். தன்னைப் பார்த்து எள்ளி நகையாடிய ஊர் மக்கள் இப்பொழுது அவரை நாடி அறிவுரை கேட்பதாகக் கூறுகிறார்.<br>**2. உரையாடல் உத்தி**<br>• சென்னையில் குழந்தைவேல் தானப்பனைச் சந்தித்ததும் அவர்கள் நீண்ட நேரம் உரையாடுகின்றனர். அதன்வழி தானப்பனின் வாழ்க்கைப் போக்கைக் குழந்தைவேலால் அறிய முடிகிறது.<br>• திரு.வி,க. சொற்பொழிவைக் கேட்டு மனமாற்றம் அடையும் தானப்பன் நூல்களைப் படித்து தன் சிந்தனையை வளர்த்துக் கொள்கிறான்.அவ்வப்போது குழந்தைவேலை நாடி உரையாடித் தன் கருத்துகளைப் பகிர்ந்து கொள்கிறான்.<br>**3. சொற்பொழிவு / உரை உத்தி**<br>• ‘அறநெறி’ எனும் தலைப்பில் திரு.வி.க. ஆற்றும் சொற்பொழிவை முருகையா, குழந்தைவேல்,தானப்பன் ஆகிய மூவரும் கேட்கின்றனர்.<br>• திரு.வி.க. உலக வரலாற்றிலிருந்தும் அறிஞர்களின் நூல்களிலிருந்தும் பல சான்றுகளை எடுத்துக்காட்டி இரண்டு மணிக்குமேல் உரையாற்றுகிறார். இந்தச் சொற்பொழிவு பின்னாளில் தானப்பன் வாழ்வின் மாற்றத்திற்கு வழிகோலானது.<br>**4. நனவோடை உத்தி**<br>• தானப்பனின் மனைவியும் வச்சிரநாதனும் நெருங்கிப் பழகுவதை எண்ணிப் பார்த்துக் குழந்தைவேல் வருத்தமும் குழப்பமும் அடைகிறான்.<br>**5. முன்னோக்கு உத்தி**<br>• தானப்பன் தன் மனைவியோடு போராடி அவளைக் கொன்று விட்டதாக குழந்தைவேல் கனவு கண்டு அலறி எழுகிறான்; வீணான கற்பனைகள் கூடாது எனத் தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்கிறான்.<br>**6. கடித உத்தி**<br>• சித்தியின் கொடுமையால் சென்னைக்கு ஓடிப்போன தானப்பன் தனக்கு நேர்ந்த அனுபவங்களை விளக்கி குழந்தைவேலுவிற்கு ஒரு கடிதம் எழுதுகிறான்.<br>• தானப்பன் – கனகம் ஆகிய இருவரின் இறப்பிற்குப்பின் கனகம் தானப்பனுக்கு எழுதிய ஏழு கடிதங்களைக் குழந்தைவேல் படித்துப் பார்க்கிறான்.<br>(ஏதேனும் 3 கருத்துகள்) | 3 X 3<br>9<br>மொழி 1 |



CamScanner

CamScanner